அலைவீசும் கடலோரம் மனசெல்லாம் துயர் ஈரம்
எம் வாழ்வுக்கு ஏன்சோகம்
எமைகாத்த கடல் தாயே எமை கொன்று போட்டாயே
ஐயோ என்ன சாபம்
கடல் ஏற படகில்லை நாம் வீசும் வலையில்லை
கூடி வாழ்ந்த உறவில்லை
நாம் வாழ்ந்த ஊரில்லை கும்பிட்டகோயிலில்லை
தெய்வம் தான் இல்லையா
அள்ளித்தந்து அரவணைத தாயே ஏன்டித்தாய்
நம்பித்தானே நாம் வாழ்ந்தோம் உயிரை ஏன் பறித்தாய்
நெஞ்சுருகி நாம் வேக சோகம் ஏன் தந்தாய்
நேசமுடன் வாழ்ந்த எங்கள் வாழ்வை ஏன் கொன்றாய்

கோடிய ராட்சத உலையே  கொடுமை தந்தாய் அலையே
இருப்பேன் போனதென்ன
நேய்தல் குடி மேல் இடியா நெஞ்சை பிழந்த துயரா
ஒப்பாரி ஓலம் என்ன
நாம் யாரை கேள்வி கேட்க நாம் யாரை சொல்லி நோக
பொல்லாத இந்த காலம் என்ன 2

அம்பா பாடிய வாய்கள் எல்லாம் வெம்பி அழுவது ஏன்
அம்மா எங்கள் கடல் தாயே உறவுகள் விழுவது ஏன்
என்னம்மா குற்றம் செய்தோம்  எம்மை குதறி விட்டாய்
சின்னஞ்சிறு குஞ்சுகளை ஏன்தான் கதற விட்டாய்

இடர்கள் எம்மை சூழ இனிமை வாழ்வு சாக
இதயங்கள் அழுவதென்ன
சொத்தை இழந்த சோகம் ஏழ்மை வாழ்வில் சொந்தம்
எம் கனவுகள் அழிவதென்ன
எம் வேதனை தீராதா நல்ல காலங்கள் வாராதா
ஒரு மாற்றம் இனிமேல் உயிர்க்காதா  2

அலைவீசும் கடலோரம் மனசெல்லாம் துயர் ஈரம்
எம் வாழ்வுக்கு ஏன்சோகம்
எமைகாத்த கடல் தாயே எமை கொன்று போட்டாயே
ஐயோ என்ன சாபம்
கடல் ஏற படகில்லை நாம் வீசும் வலையில்லை
கூடி வாழ்ந்த உறவில்லை
நாம் வாழ்ந்த ஊரில்லை கும்பிட்டகோயிலில்லை
தெய்வம் தான் இல்லையா
அள்ளித்தந்து அரவணைத தாயே ஏன்டித்தாய்
நம்பித்தானே நாம் வாழ்ந்தோம் உயிரை ஏன் பறித்தாய்
நெஞ்சுருகி நாம் வேக சோகம் ஏன் தந்தாய்
நேசமுடன் வாழ்ந்த எங்கள் வாழ்வை ஏன் கொன்றாய்